செய்தி வெளியீட்டு எண். 92 நாள்.14.02.2017

# திருவள்ளூர் மாவட்டத்தில் இ-சேவை மையங்கள் மூலம் இலவச வாக்காளர் அட்டை பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

~~~~~

2017 ஜனவரி 1ம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தப் பணிகள், கடந்த 01.09.2016 தேதியில் வரைவுப் பட்டியல் வெளியீட்டுடன் தொடங்கியது. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பு, நீக்கம், திருத்தம், இடமாற்றம் செய்யக் கோரும் விண்ணப்பங்கள் 01.09.2016 முதல் 30.09.2016 வரை பெறப்பட்டன.

பெயர் சேர்த்தலுக்காக 1,01,349 விண்ணப்பங்கள் பெறப்பட்டதில் 1,00,596 விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு 05.01.2017ம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இடப்பெயர்ச்சி, இறப்பு மற்றும் இரட்டை பதிவு ஆகியவற்றின் காரணமாக 1,759 பதிவுகள் நீக்கப்பட்டுள்ளன.

கடந்த 2016ம் ஆண்டு சிறப்பு சுருக்க முறை திருத்தத்தின் போது மாவட்டங்களில் இருந்து தரவுகள் தொகுக்கப்பட்டு, ஒப்பந்ததாரர்கள் மூலம் புகைப்பட வாக்காளர் அடையாள அட்டைகள் அச்சிடப்பட்டு அந்தந்த பகுதி வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் உரியவர்களுக்கு வழங்கப்பட்டன.

புதிய வாக்காளர்களுக்கு தமிழகத்தில் உள்ள இ-சேவை மையங்கள் மூலம் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விண்ணப்பத்தில் தங்களின் கைப்பேசி எண்ணை அளித்துள்ள புதிய வாக்காளர்களுக்கு குறுஞ்செய்தி மூலம் ஒரு தனிப்பட்ட அடையாள எண் அனுப்பப்படும். இந்த அடையாள எண்ணை, ஏதேனும் ஒரு புகைப்பட அடையாளச் சான்றுடன், தங்கள் பகுதிக்கு அருகில் உள்ள இ-சேவை மையத்தில் காண்பித்து வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை இலவசமாக பெற்றுக் கொள்ளலாம். இதற்காக புதிய மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. தங்களுடைய கைப்பேசி எண்ணை அளிக்காத புதிய வாக்காளர்கள், தேர்தல் துறையின் கட்டணமில்லா உதவி எண் 1950-ஐ தொடர்பு கொண்டு கைப்பேசி எண்ணை பதிவு செய்ய வேண்டும். அவர்களுக்கும் அடையாள எண் அனுப்பப்படும். அவர்களும் இந்த அடையாள எண்ணை, ஏதேனும் ஒரு புகைப்பட அடையாளச் சான்றுடன் இ-சேவை மையங்களில் காண்பித்து வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை இலவசமாக பெற்றுக் கொள்ளலாம் என திருவள்ளூர் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~